**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**O.S.No.385/2023**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 2 |
| பெயர் | .. | கருணேஸ்வரன் |
| தகப்பனார் / கணவர் | .. | பாலசுப்பிரமணி |
| வயது | .. | 65 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | அசனமாப்பேட்டை |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

நான் எம்.ஏ டி.கோப் படித்துள்ளேன். நானும், வாதியும் ஒரே ஊரைச்சாந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி சண்முகத்திடம் எனக்கு எந்த வரவு செலவு இல்லை என்றால் சரிதான். பாண்டு எப்போது எழுதப்பட்டது என்றால் 30.12.2021 ஆகும். என்னுடன் யார், யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் குமார் என்பவர் கையொப்பம் செய்தார். பணம் வங்கியில் இருந்து கொண்டு வந்து கொடுத்தாரா என்றால் அதுபற்றி தெரியாது. வாதி, பிரதிவாதியிடம் எவ்வளவு ஆண்டுகளாக பணிசெய்து வருகிறார்என்று தெரியுமா என்றால் தெரியாது, பணம் கொடுக்கும் போது சென்றேன். நான் ஏற்கனவே பூர்த்தி செய்து வைத்திருந்த பாண்டை பிரதிவாதிகள் இல்லாத நேரத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு உறவினர் என்பதால் பூர்த்தி செய்யப்பட்ட பாண்டில் மோசடியாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என் முன்னிலையில் பிரதிவாதிகள் எந்த தொகையும் வாதியிடம் இருந்து வாங்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**